**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 40/2024**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சின்னக்காளை** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பொன்னு** | **Calling** | : | |
| **Village** | : | **செந்துரை, நத்தம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **21.05.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), திரு. **சின்னக்காளை** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைப் பார்த்தது இல்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் நேரத்தில் எங்கள் வீட்டின் முன்பு ஒரு விபத்து நடந்து இருந்தது. அங்கு கூட்டமாக இருந்தது. நான் போய் பார்த்த போது ஒரு பெண்ணுக்கு காயம் ஏற்பட்டு இருந்தது. பிறகு அந்த பெண்ணை அவசர 108 ல் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அதன் பிறகு அந்த பெண்ணுக்கு என்ன ஆனது என்று தெரியாது.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 24.02.20219ம் தேதி பழனிபட்டியில் நடந்த காதுகுத்து விழாவில் கலந்துவிட்டு, மீண்டும் திரும்பி வரும்போது, எங்களுக்கு முன்னால் ஆஜர் எதிரி அதே காதுகுத்து விழாவில் கலந்துவிட்டு தன்னுடைய இருசக்கர வாகனத்தில் பாண்டித்துரை மகள் சரிதா மற்றும் அவருடைய சினேகிதி நத்தினி ஆகியோரை வாகனத்தின் பின்னால் அமர வைத்து கவனக்குறைவாக, அதிவேகமாக ஓட்டிவந்து அடைக்கனூர் பேருந்து நிறுத்ததின் அருகே, ரோட்டின் ஓரத்தில் உள்ள பள்ளத்தில் கவுழ்த்தி கீழே விழுந்து விட்டார். நானும், என் தம்பியும் போய் பார்த்தபோது, சரிதா அங்கேயே இறந்துவிட்டார். நத்தினிக்கு காயம் ஏற்பட்டு இருந்தது. இது பற்றி போலீசாரிடம் தகவல் கொடுத்தேன் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரியைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.21 17:24:21 +0530